# விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 30*
*அக்டோபர், 2011*
*vidiyalmagazhine.blogspot.com*
*vidiyalmagazhine@gmail.com*



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**www.ksrcasthamizh.blogspot.com**
**www.ksrcas.edu**


# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்


*நெப்போலியன் பொனபார்ட்* 02,
**GELILEO** 16,
*சர்வதேசவிண்வெளி ஆய்வுமையம்* 17,


## கட்டுரைகள்


*லால் பகதூர் சாஸ்திரி* 04,
*திருப்பூர் குமரன்* 10,
*மாயூரம் வேதநாயகம் பிள்ளை* 11,
*வள்ளலார்* 13,
***About Malgudi Day's*** 18,


## கவிதை


*பெண்ணே நீ வாழ்க* 12


## துளிச்செய்திகள்


*கணினிக் குறள்* 10


## மாதம் ஒரு படைப்பாளர்


*எழுத்தாளர் அசோகமித்திரன்* 15


## நிகழ்ச்சி


*உரைநடைப் பயிலரங்கு* 20


▼

# நெப்போலியன் பொனபார்ட்

**எம். கஸ்தூரி,**
முதலாண்டு வேதியியல்துறை

நெப்போலியன் பொனபார்ட் (15 ஆகஸ்ட் 1769 – 5 மே 1821). முதலாம் நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் படைத் தலைவராகவும், அரசியல் தலைவராகவும் இருந்தவர். தற்கால ஐரோப்பிய வரலாற்றில் இவனுடைய தாக்கம் குறிப்பிடத்தக்கது. இவர் பிரெஞ்சுப் புரட்சியில் ஒரு தளபதி, பிரெஞ்சுக் குடியரசின் ஆட்சியாளர், பிரெஞ்சுப் பேரரசர், இத்தாலியின் மன்னர், சுவிஸ் கூட்டமைப்பின் இணைப்பாளர், ரைன் கூட்டாட்சியின் காப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

கோர்சிக்காவில் பிறந்த இவர் பிரான்ஸில் கனரக ஆயுதங் களுக்கான அலுவலராகப் பயிற்சி பெற்றார். பிரெஞ்சுப் புரட்சியின் தளபதியாக, பிரான்சுக்கு எதிரான முதலாம் கூட்டணி மற்றும் இரண்டாம் கூட்டணிகளுக்கு எதிரான போர்களை வழிநடத்தியதன் மூலம் இவர் முன்னணிக்கு வந்தார்.



1799 ஆம் ஆண்டில் ஒரு சதிப்புரட்சியை நிகழ்த்தி அதன் மூலம் பிரெஞ்சுக் குடியரசின் முதல் கன்சல் ஆகப் பதவியில் அமர்ந்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், பிரான்சின் பேரரசரானார்.

19 ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் ஐரோப்பாவின் ஒவ்வொரு முக்கிய நாட்டுக்கு எதிராகவும் படை எடுத்தார்.

தொடர்ச்சியான பல போர் வெற்றிகளினாலும், விரிவான கூட் டணிகளினாலும் அவர் ஐரோப்பாக் கண்டத்தையே தனது மேலாண்

மைக்கு உட்படுத்தி யிருந்தார். தன் நெருங்கிய நண்பர்களையும், உறவினர் களையும், பிரான்சுக்குக் கீழ் வந்த நாடுகளின் பேரரசர்களாகவும், முக்கிய அலுவலர் களாகவும் நியமித்தார்.

1812 இல் இடம் பெற்றுத் தோல்வியில் முடிந்த பிரான்சின் ரஷ்ய ஆக்கிரமிப்பு நெப்போலியனுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இப் படையெடுப்பு, நெப்போலியனின் படைகளைப் பெரும் அழிவுக்கு உள்ளாக்கியது.

இதிலிருந்து மீள்வதற்கு அதற்கு முடியவில்லை. அக்டோபர் 1813 இல், ஆறாவது கூட்டணி, லீப்சிக் என்னுமிடத்தில் நெப்போலியனின் படைகளை முறியடித்து, பிரான்சுக்குள் நுழைந்தன.

1814 ஏப்ரலில், கூட்டணி நெப்போலியனைப் பதவியில் இருந்து இறக்கி எல்பாத் தீவுக்கு நாடு கடத்தியது. ஓராண்டிலும் குறைவான காலத்தில் நெப்போலியன் மீண்டு வந்து இழந்த அரசைக் கைப்பற்றினார்.

எனினும் 1815 ஜூன் 18 இல் வாட்டர்லூ என்னுமிடத்தில் அவன் இறுதித் தோல்வியைச் சந்தித்தார். இதன் பின்னர் அவரது வாழ்நாளின் இறுதி ஆறாண்டுகளும் பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சென் ஹெலெனாத் தீவில் கழிந்தது.


நெடு நாட்களாகவே நெப்போலி யனின் மரணத்தின் காரணம் அறுதியிடப்படாமல் இருந்தது. ஆங்கிலேயர்கள் ***ஆர்செனிக் நச்சு*** தந்து நெப்போலியனைக் கொன்றி ருக்கலாம் என்பது போன்று இருந்த பழைய தோற்றப்பாடுகள் யாவும் தற்செயல் நிகழ்வுகள் எனவும், நெப்போலியன் இறக்கவும் அவரின் வம்சமே இறக்கவும் காரணம் பரம்பரையாக இருந்து வந்த இரைப்பைப் புற்று நோயே (stomach cancer) என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெப்போலியனின் புகைப்படங்கள் அனைத்திலும் தன் வலக்கையைச் சட்டைக்குள் வைத்திருக்கக் காரணம் இந்நோய் ஏற்படுத்திய வயிற்று வலியால்தான் எனவும் நம்பப்படுகிறது.

¤

# லால் பகதூர் சாஸ்திரி

**எஸ். சுரேகா**
முதலாண்டு வேதியியல் துறை



லால் பகதூர் 1904ஆம் ஆண்டு தற்போதய உத்தர பிரதேச மாநிலத்திலுள்ள முகல்சாரி என்ற ஊரில் பிறந்தார். பிறந்த போது அவருக்கு வைத்த பெயர் லால் பகதூர் சிறிவஸ்தவா. இவரின் தந்தை சரதா பிரசாத் பள்ளி ஆசிரியர். பின்பு அலகாபாத்திலுள்ள வருவாய் துறையில் எழுத்தராக பணியில் சேர்ந்தார்.


மூன்று மாத குழந்தையாக இருந்த போது கங்கை கரையில் தாயாரின் கையில் இருந்து நழுவி ஓர் இடையரின் கூடையில் விழுந்து விட்டார். இடையருக்கு குழந்தை கிடையாது, எனவே இது தனக்கு கடவுளின் பரிசு என கருதி லால் பகதூரை தன் வீட்டுக்கு எடுத்து சென்று விட்டார். குழந்தையை காணாத லால் பகதூரின் பெற்றோர் காவல்துறையில் புகார் அளித்தனர். காவலர்கள் லால் பகதூரைக் கண்டு பிடித்து அவர் தம் பெற்றோரிடம் சேர்பித்தனர்.

லால் பகதூர் ஒன்றரை வயது குழந்தையாக இருந்த பொழுது இவரின் தந்தை இறந்து விட்டார். எனவே தாயார் ராம்துல்லாரி தேவி இவரையும் இவரின் இரண்டு சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு தன் தந்தை வீட்டிற்குச் சென்று தங்கிவிட்டார். 10 வயது வரை தன் பாட்டனார் கசாரி லால் வீட்டிலேயே லால் பகதூர் வளர்ந்தார். அங்கு உயர் நிலைப் பள்ளி இல்லாததால் மேற்கொண்டு படிக்க வாரணாசிக்கு அனுப்பப் பட்டார். அங்கு தாய்வழி மாமா வீட்டில் தங்கி இருந்து அரிஸ்சந்தரா உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்கலானார். வாரணாசியில் உள்ள போது ஒரு முறை நண்பர்களுடன் கங்கை ஆற்றின் மறு கரையில் நடந்த சந்தையைப் பார்க்கச் சென்றார். திரும்பும் போது படகுக்குக் கொடுக்கப் போதிய பணம் இல்லை. நண்பர்களிடம்

கடன் பெறுவதற்குப் பதிலாக ஆற்றை நீந்திக் கடந்தார்.

மாணவனாக இருக்கும்போது இவருக்குப் புத்தகங்கள் படிப்ப தென்றால் மிகவும் பிடிக்கும். குரு நானக்கின் வரிகள் மீது ஆர்வமாக இருந்தார். இந்திய சுதந்திர போராட்ட வீரர் பால கங்காதர திலகர் அவர்களைப் போற்றினார், 1915ஆம் ஆண்டு வாரணாசியில் மகாத்மா காந்தி அடிகளின் உரையை கேட்ட பிறகு தன் வாழ்க்கையை நாட்டிற்கு அர்பணித்தார். சாதி முறையை எதிர்த்த இவர் தன் பெயரில் இருந்த சிறிவஸ்தவா என்ற சாதியைக் குறிக்கும் குடும்ப பெயரை நீக்கினார்.

1921இல் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி அடிகள் தொடங்கிய போது அதில் கலந்து கொண்டு சிறை சென்றார். காவலில் வைக்க உரிய வயது இவருக்கு இல்லாததால் அரசு இவரை கைது செய்து காவலில் வைக்காமல் வெளியில் அனுப்பியது. பின் வாரணாசியிலுள்ள தேசியவாதி சிவ் பிரசாத் குப்தா அவர்களால் தொடங்கப்பட்ட காசி வித்தியா பீடத்தில் இணைந்து 4 ஆண்டுகள் படித்தார். அங்கு முனைவர் பகவன்தாஸ் அவர்களின் மெய்யியல் தொடர்பான விரிவுரையில் பெரிதும் கவரப்பட்டார். 1926இல் காசி வித்தியாபீடத்தில் படிப்பை முடித்ததும் சாஸ்திரி என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. இது பின் இவர் பெயருடன் இணைந்து விட்டது. மக்கள் சமுதாயத்தின் பணியாள் என்ற அமைப்பில் வாழ்நாள் உறுப்பினராக பதிவு செய்து முசாப்பர்பூர் என்னும் இடத்தில் அரிசனங்களின் மேம் பாட்டுக்காக உழைத்தார். பின் அவ்வமைப்பின் தலைவரானார்.




1921இல் லலிதா தேவியை மணந்தார். பெரும் வரதட்சணை வாங்கும் பழக்கம் வெகுவாக இருந்த போதிலும் இவர் காதியையும் இராட்டையும் மட்டும் வரதட்சணையாக வாங்கி கொண் டார். 1930 ஆம் ஆண்டு உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார். அச்சமயம் இவரின் பெண்ணின் உடல் நலம்

மிகவும் கவலைக்கிடமானதால், எந்தப் போராட்டத்திலும் ஈடுபட கூடாது என்ற நிபந்தனையின் பேரில் 15 நாட்களுக்கு விடுதலை செய்யப் பட்டார். ஆனால் அவர் வீட்டிற்கு வருவதற்குள் அவர் பெண் மரணமெய்திவிட்டார்.

ஈமச்சடங்குகளை முடித்து விட்டு 15 நாட்கள் முடிவதற்கு நாள் உள்ள போதும் தாமாகவே சிறைச்சாலைக்கு திரும்பிவிட்டார். அடுத்த ஆண்டு இவர் மகனுக்கு சுரம் என்றதால் ஒரு வாரம் வெளியில் செல்ல அனுமதி வாங்கினார். ஆனால் மகனுக்கு ஒரு வாரத்தில் சுரம் சரி ஆகாததால் குடும்ப உறுப்பினர்கள் வேண்டு கோளையும் மீறி சிறைச் சாலைக்கு திரும்பினார்.




1937இல் உத்திர பிரதேச நாடாளுமன்ற குழுவின் ஒருங்கிணைப்பு செயலாளராக பணிக்கமர்ந்தார். 1940இல் சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவாகத் தனி நபர் சத்தியாகிரகம் இருந்ததால் ஓர் ஆண்டு சிறை தண்டனை பெற்றார். 1942ஆம் ஆண்டு காந்தி அடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்தார். சிறையிலிருந்து விடுதலையாகி வந்திருந்த லால் பகதூர் சாஸ்திரி அலகாபாத்துக்குப் பயணம் செய்து ஜவகர்லால் நேருவின் ஆனந்த பவன் இல்லத்திலிருந்து வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடர்பான குறிப்புகளை, ஆணைகளை ஒரு வார காலத்திற்குச் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு வழங்கினார். அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட லால் பகதூர் சாஸ்திரி 1946ஆம் ஆண்டு வரை சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மொத்தமாக ஏறக்குறைய 9 ஆண்டுகள் சிறையில் கழித்தார். சிறையில் இருந்த காலத்தில் பல புத்தகங்களை படித்தார். மேற்கத்திய தத்துவஞானிகள், புரச்சியாளர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள் ஆகியோரைப் பற்றி நன்கு அறிந்து கொண்டார். மேரி கியூரியின் வாழ்க்கை வரலாற்றை இந்தியில் மொழிபெயர்த்தார்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் சாஸ்திரி உத்தர பிரதேசத்தின்

நாடாளுமன்ற செயலராக நியமிக்கப் பட்டார். உத்தர பிரதேச முதலமைச்சர் கோவிந் பல்ல பண்ட் அவர்களின் அமைச்சரவையில் காவல் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சராக நியமிக்கப் பட்டார். போக்குவரத்து துறை அமைச்சராக இவரே முதலில் பெண்களை நடத்துநராக நியமித் தார். காவல் துறை அமைச்சராக, கட்டுப்பாடற்ற கூட்டத்தைக் கலைப் பதற்குக் கம்பால் அடிப்பதற்குப் பதிலாக நீரைப் பீய்ச்சி அடிக்கும் படி காவல்துறைக்கு ஆணையிட்டார்.

1951 இல் காங்கிரஸ் செயற் குழுவுக்கு பொது செயலாளராக நியமிக்கப்பட்டார். தலைவராக ஜவகர் லால் நேரு இருந்தார். வேட்பாளர் தேர்ந்தெடுத்தல், தேர்தல் நடவடிக் கைகள், தேர்தல் விளம்பரங்களின் போக்கு போன்றவற்றிற்கு இவர் பொறுப்பானவராக இருந்தார். காங்கிரஸ் கட்சி 1952, 1957, 1962 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பெற்ற பெரும் வெற்றிகளுக்கு இவரது பங்களிப்பும் காரணமாகும்.

1951 இல் நேருவால் இந்திய மேலவைக்கு நியமிக்கப்பட்டார். 1951-1956 வரை ரயில்வே மற்றும் போக்கு வரத்து துறை அமைச்சராக பணிபுரிந்தார். 1956 இல் மெகபூப்நகர் ரயில் விபத்தில் 112 பேர் இறந்ததற்கு தார்மீக பொறுப்பேற்று பதவி விலக முன்வந்தார். எனினும் நேரு இவரின் பதவிவிலகலை ஏற்றுக்கொள்ள வில்லை. மூன்று மாதங்கள் கழித்து அரியலூரில் நடைபெற்ற இரயில் விபத்தில் 144 பேர் இறந்தனர். அதைத் தொடர்ந்து சாஸ்திரி பதவி விலகல் கடிதத்தை நேருவிடம் ஒப்படைத்தார். பதவி விலகலை ஏற்றுக்கொண்ட நேரு இச்சம்பவம் பற்றி நாடாளுமன்றத்தில் உரை யாற்றும் போது, விபத்துக்குச் சாஸ்திரி காரண மில்லை என்ற போதிலும் அரசியல் சாசன முறைமைக்கு இது முன்மாதிரியாக விளங்கும் என்று கூறினார்.

1957 ஆண்டு நடந்த பொது தேர்தலை தொடர்ந்து சாஸ்திரி நடுவண் அமைச்சரவையில் இணைந்தார். முதலில் போக்கு வரத்து மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தார். பின்பு வணிக மற்றும் தொழில் துறை அமைச்சராக பணிபுரிந்தார். 1961இல் உள்துறை அமைச்சராகப் பொறுப் பேற்றுக்கொண்டார். இவர் உள் துறை அமைச்சராக இருந்த பொழுது சந்தானம் தலைமையில்

ஊழல் தடுப்பு குழு அமைவதற்கு காரணமாகவிருந்தார்.

பிரதமர் ஜவகர்லால் நேரு 1964 மே 27 இல் மறைந்ததைத் தொடர்ந்து அரசில் வெற்றிடம் ஏற்பட்டது. அப்போதய காங்கிரஸ் தலைவர் காமராஜர் சாஸ்திரி பிரதமராக வருவதற்குக் காரணமாக இருந்தார். நேருவின் கொள்கையுடையவரும் சமதர்ம வாதியான இவரது தன்மை யான பாங்கும் பேச்சும், பழமையை விரும்பும் வலதுசாரியான மொரார்ஜி தேசாய் பிரதமராவதை விரும்பா தோரிடம் செல்வாக்குச் செலுத்தியது. மாற்று கருத்துகளையும் மதித்து சமரசம் காணும் இவரது இயல்பான குணத்தினால் இவரது பணி சிறப்பாக நடந்தது. குறுகிய காலம் ஆட்சியிலிருந்த இவரால் நாட்டின் பொருளாதார நெருக்கடியையும், உணவுப் பற்றாக்குறையையும் சமாளிக்க முடியவில்லை. எனினும் இந்திய மக்களிடம் இவரின் மதிப்பு குறைய வில்லை, இவர் இந்தியாவில் பசுமை புரட்சி கொண்டுவர முயன்றார். பசுமை புரட்சி மூலம் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதுடன் தேவைக்கதிகமாகவும் உணவு உற்பத்தி செய்தது, அதை பார்க்க இவர் உயிரோடு இல்லை. பாகிஸ்தானு டனான 22 ஆம் நாள் போரின் போது ஜெய் ஜவான் ஜெய் கிசான் என்ற முழக்கத்தை உருவாக்கினார். பசுமை புரட்சியை இவர் வழியுருத்திய போதும் வெள்ளை புரட்சியையும் ஊக்கப் படுத்தினார். 1964 அக்டோபர் கைரா மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தின் போது பால் வளம் பற்றி இவருக்குச் சிறப்பான கருத்து உருவாயிற்று. ஆனந்தில் வெற்றிகரமாகச் செயல் பட்ட பால் துறையைப் போல் நாடு முழுதும் பால்வளத்துறை செயல்பட வேண்டும் என விரும்பினார். இதன் காரணமாக 1965இல் தேசிய பால்பண்ணை வளர்ச்சி துறை அமைக்கப்பட்டது.

இந்திய - பாகிஸ்தான் போர் இரு நாடுகளுக்கும் பலத்த ஆள் மற்றும் பொருளாதார சேதங்களை உண் டாக்கியது. செப்டம்பர் 23, 1965 அன்று ஐக்கிய நாடுகள் சபையினால் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்த ஆணை மூலம் இந்திய பாகிஸ்தான் போர் முடிவுக்கு வந்தது.

போர் நிறுத்த சாற்றுதலுக்குப் பின் அதனை அமல் படுத்துவதில் இருந்த, இடைவிடாத பிரச்சி னைக்குத் தீர்வு காண சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் முகமது அயூப்

கானும் சோவியத் ஒன்றிய தலைவர் அலெக்சி கோசிசின் அவர்களால் தர்'கண்டில் கூட்டப்பட்ட உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்கள். 1966 ஜனவரி 2ஆம் நாள் இந்திய அமைச்சரவையின் முழு சம்மதத் தோடு லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்ட்டுக்குப் புறப் பட்டுச் சென்றார். அங்கே ஏழு நாட்கள் இரு நாட்டுத் தலைவர்களும் அவர்தம் குழு வினரும் பேசிப் பார்த்தும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை. அன்று இரவு கோசிசின் தலையிட்டு இரு தலைவர்களுடனும் தனித் தனியே பேசிப் பார்த்து உடன்படிக்கைக்கு வழி கண்டார். மறுநாள் ஜனவரி 10, 1966 இல் சாஸ்திரியும் கானும் தாஷ்கண்ட் சாற்றுதலில் கையொப்ப மிட்டார்கள். மிக எளிதான ஷரத்துக்களே நிறைந்துள்ள (ஒன்பது அம்சங்கள்) இந்த சாற்றுதல் கையெழுத்தாக ஏன் அத்தனை நாட்கள் பிடித்தன என்று சிந்தித்தாலே, இரு நாட்டிற்கும் இடையே இருந்த மனதளவிலான பெரிய இடைவெளி புரியும்.

அன்று இரவு, ரஷ்யப் பிரதமர் தந்த விருந்தில் கலந்து கொண்டுவிட்டு தன் அறைக்குத் திரும்பிய சாஸ்திரிக்கு இரவு ஒரு மணிக்கு மேல் இருமல், மார்வலி, மூச்சுத் திணறல் என்று ஆரம்பித்து உயிரே பிரிந்துவிட்டது. மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார் என்று அறிவிக்கப் பட்டது. இந்தியாவை உலுக்கிய நம்ப இயலாத செய்தியாக இருந்தது அது. உலகமும் கொஞ்சம் ஆடிப் போனது. ரஷ்யாவில் இறந்திருந்த இந்தியப் பிரதமர் குறித்து, ***“சாஸ்திரி இல்லாமல் உலகமே கொஞ்சம் சிறுத்து விட்டது”*** என்று அமெரிக்க அதிபர் ஜான்ஸன் தெரிவித்தார்.


சாஸ்திரியின் உடலைச் சவப் பெட்டியில் ஏற்றி இந்தியா கொண்டுவர நடந்த ஏற்பாடுகளின் போது, கோஸிஜினும் அயூப்கானும் அந்தப் பெட்டியை விமானத்தில் ஏற்ற சுமந்து வந்தார்கள் என்பது சிலிர்க்க வைக்கும் செய்தி.

எத்தனையோ பதவிகள் வகித்த சாஸ்திரிக்குச் சொந்தமாக வீடு ஏதும் இல்லை. இறுதிக் காலத்தில் தவணை முறையில் கார் ஒன்று வாங்கி அந்தக் கடனைத்தான் வாரிசுகளுக்கு விட்டுச் சென்றார்.

**திரு. லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாள் அக்டோபர் 02ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.**

¤

# திருப்பூ குமரன்



திருப்பூர் குமரன் (அக்டோபர் 4, 1904 - ஜனவரி 11, 1932) இந்திய விடுதலைப் போராட்ட தியாகி ஆவார். இவர் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். 1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கிய போது தமிழகம் முழுவதும் அறப் போராட்டம் பரவிய நேரத்தில் திருப்பூரில் தேசபந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் அச்சமயம் ஏற்பாடு செய்த மறியல் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குகொண்டு, கையில் தேசியக் கொடியினை ஏந்தி, தொண்டர் படைக்குத் தலைமை ஏற்று, அணிவகுத்துச் சென்றபோது காவலர் களால் தாக்கப்பட்டு தடியடிபட்டு மண்டை பிளந்து, கையில் இந்திய தேசியக் கொடியை ஏந்தியபடி மயங்கி விழுந்து, பின்னர் மருத்துவமனையில் உயிர் துறந்தார். இதனால், ***'கொடிகாத்த குமரன்'*** என்றும் அழைக்கப்படுகிறார்.

***நினைவகம்***

தமிழ்நாடு அரசு திருப்பூர் குமரன் தியாகத்தைப் போற்றும் வகையில் திருப்பூரில் திருப்பூர் குமரன் நினைவகம் ஒன்றை அமைத்துள்ளது. இங்கு தற்காலிக நூல் நிலையம் உள்ளது. படிப்பகம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. மேலும், இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்கள் வரைந்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**திருப்பூ குமரனின் பிறந்தநாள்**
**அக்டோபர் 4ஆம் நாள்**
**கொண்டாடப்படுகின்றது.**

-ஆசிரியர் குழு

¤

# கணினிக் குறள்

**"அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை கணினி**
**அறிவு இல்லார்க்கு இவ்வுலகமுமில்லை"**

**"கற்க கசடற கணினியைக் கற்றபின்**
**நிற்க ஐ.டி. யில் உயர்ந்து"**

**"தேடுக தேடுக கூகிலில் உனக்கான**
**தகவல் வரும் வரை"**

**கே. காயத்ரி,**
முதலாண்டு வேதியியல்துறை.

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை

**வி. நவீன் ராஜு**
இரண்டாமாண்டு உயிர் வேதியியல் துறை



மாயூரம் வேதநாயகம் பிள்ளை (அக்டோபர் 11, 1826 - ஜூலை 21 1889) ஒரு புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். இவர் 1878ல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினம் (நாவல்) தமிழில் வெளியான முதல் புதினம்.

இவர் தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் பிறந்தார். தொடர் வண்டியில் திருச் சிராப்பள்ளியில் இருந்து மதுரைக்குச் செல்கையில் குளத்தூர் தொடர்வண்டி நிலையத்தில் பிறந்தார். தந்தையார் சவரிமுத்துப் பிள்ளை - தாயார் ஆரோக்கிய மரி அம்மையார். 1876-1888 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடை யளித்தார். இதனைப் போற்றும் விதமாக கோபாலகிருஷ்ண பாரதியார் ***நீயே புருஷ மேரு*** என்ற பாடலைப் பாடினார்.

### ***வாழ்க்கைச் சுருக்கம்***

ஆரம்பக் கல்வியைத் தமது தந்தையிடம் கற்ற வேதநாயகம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிக் கல்வியை தியாகராச பிள்ளை என்பாரிடம் பயின்றார். சிறு வயதிலேயே திருமணங்கள், விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளின் போது நகைச் சுவையான கவிதைகளை எழுதி னார்.

இவர் நீதிமன்றங்களில் பதிவாளராகவும் மொழிபெயர்ப் பாளராகவும் பணியாற்றிய பின் 1856 இல் தரங்கம்பாடியில் முனிசீஃப் வேலையில் அமர்ந்தார். மாயவரம் மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி புரிந்தமையால் இவரை மாயவரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கலாயினர். அந்தக் காலகட்டத்தில் 16 புத்தகங்கள் எழுதினார். தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தையும் அப்போதே எழுதினார். வீணை இசைப்பதிலும் வல்லமை பெற்றிருந்தார்.

அவரது சமகாலத் தமிழறிஞர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இராமலிங்க வள்ளலார், திருவாவடு துறை மடத்தின் மகா சன்னிதானம் சுப்பிரமணிய தேசிகர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோருடன் நட்பு பாராட்டி வாழ்ந்திருந்தார்.

***ஆக்கங்கள்***

இவர் ஆக்கிய நூல்கள் பல. அவற்றுள் சில வருமாறு: 1862இல் சித்தாந்த சங்கிரகம் - உயர்நிலை ஆங்கில சட்டங்களை தமிழில் செய்த நூல் 1869இல் பெண்மதி மாலை - பெண்களுக்கு ஏற்ற அற முறைகளைப் பாட்டுக்களாலும் உரைநடையாலும் கூறும் நூல். 1873இல் மூன்று நூல்கள் திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, தேவமாதர் அந்தாதி இவை செய்யுள் நூல்கள். கிறித்துவ மதம் பற்றியது. மத வரலாறு, மற்றும் கடவுள் பால் அவருக்கிருந்த அன்பு இவற்றைப் புலப்படுத்துவது. 1878இல் பிரதாப முதலியார் சரித்திரம் புகழ் பெற்ற கற்பனைக்கதை, தமிழ்ப் புதினங்களின் முன்னோடி. இது ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1878இல் சர்வ சமய சமரசக் கீர்த்தனை ஏறத்தாழ 200 இசைப்பாடலகள். 1887இல் சுகுண சுந்தரி புதினம். 1889இல் சத்திய வேத கீர்த்தனை பொம்மைக் கலியாணம், பெரிய நாயகியம்மன் என்னும் நூல்களும் மற்றும் பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார்.

**மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிறந்தநாள் அக்டோபர் 11ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.**

¤

## பெண்ணே நீ வாழ்க!

“கருவறைத் துவங்கிக்
கல்லறை வரை
காரிகையின் வாழ்வில்
துன்பங்கள் ஆயிரம்.

ஈன்ற பொழுதிலிருந்து
இறுதி வரை நீ படும்பாட்டை
எப்படி உரைப்பேன்?

ஜனனத்தின் திறவுகோலே! நீ
இளமையில் இன்முகம் காட்டினாய்
மணநாளில் வெட்கம் தாங்கினாய்
தாய்மையில் மனம் பூரித்தாய்
இருப்பினும் வாழ்வில் பரிதவித்தாய்!

தியாகச் சுடர் நீ! கற்புத் தழல் நீ!
உன் கோலம் மாறினாலும்
உன் காலம் மாறுவதில்லை.”

**கே. காயத்ரி,**
முதலாண்டு வேதியியல்துறை.

# வள்ளலார்

**சே. கற்பகராஜ்,**
**மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி).**

வள்ளலார் இராமலிங்கம் பிள்ளை சிதம்பரத்தில் இருந்து 10மைல் தொலைவிலுள்ள மருதூரில் பிறந்தவர். பெற்றோர் இராமையா பிள்ளை, சின்னம்மையார்.

இவரோடு சபாபதி, பரசுராமன், உண்ணாமுலை, சுந்தராம்பாள் ஆகிய நால்வரும் உடன் பிறந்தனர். இராமலிங்கர் பிறந்த எட்டாம் மாதத்திலேயே தந்தையை இழந்தார். தாயார் குழந்தைகளோடு பொன்னேரி சென்று வாழ்ந்தார். பின்னர் சென்னையில் ஏழுகிணறு பகுதி வீராசாமி பிள்ளை தெருவில் குடியேறினார். அண்ணன் சபாபதி சமய சொற்பொழிவு செய்து வந்தார்கள்.

***சன்மார்க்க சிந்தனையாளர்***

தன் வாழ்வின் பெரும்பகுதியைச் சென்னையில் கழித்த இவர், நவீன சமுதாயத்தின் பெரும் பிரச்சினைகளை உணர்ந்திருந்தார். அனைத்து சமய நல்லிணக்கத்திற்காகவும் (சமரச சமயம்) சன்மார்க்கத்திற்காகவும் (Righteousness in all Endeavours) தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் பணியாற்றினார். இந்நோக்கத்தை அடையும் பொருட்டு சிதம்பரம் அருகே உள்ள வடலூரில் சத்திய ஞானசபை மற்றும் சத்திய தருமசாலை அமைத்தார்.

அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய சிந்தனைகள் மிகவும் முற்போக்குடையதாகக் கருதப் பட்டாலும், தற்பொழுது உலகெங்கும் அவருடைய சிந்தனைக்கு ஒத்த கொள்கைகள் புரிந்துகொள்ளப்பட்டு பின்பற்றப்படுகிறது.



***வள்ளலாரின் பத்துக் கொள்கைகள்***

*1)கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.*
*2)புலால் உணவு உண்ணக்கூடாது.*
*3)எந்த உயிரையும் கொலை செய்யக்கூடாது.*
*4)சாதி,மதம்,சமயம்,இனம்,மொழி முதலிய வேறுபாடு கூடாது.*
*5)இறந்தவர்களை எரிக்கக் கூடாது, சமாதி வைத்தல் வேண்டும்.*

*6) எதிலும் பொது நோக்கம் வேண்டும்.*
*7)பசித்தவர்களுக்கு சாதி, மதம், சமயம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்.*
*8)கருமகாரியம், திதி முதலியன செய்யக்கூடாது.*
*9)சிறு தெய்வ வழிபாடு செய்யக்கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது.*
*10)எல்லா உயிர்களும் நமக்கு சகோதரர்களே! அவைகளுக்கு நாம் துன்பம் செய்யகூடாது.*

***பசியாற்றுவித்தல்***

மக்களின் மிகுந்த துயரங்களுள் ஒன்றான பசியைப் போக்கிட வள்ளலார் வழி வகுத்தார். இன்றளவும் வள்ளலார் பெயரால் லட்சக்கணக்கான மக்களுக்கு பசியாற்றுவித்தல் நடைபெருகிறது. வடலூரில் தலைமை இடமாக இருந்தாலும், உலகமெங்கும் பசியாற்று வித்தலை அவரது கொள்கையைப் பின்பற்றுகின்றவர்கள் செய்கிறார்கள்.

***திருவருட்பா***

இவர் பாடிய ஆறாயிரம் பாடல் களின் திரட்டு திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது ஆறு திரு முறைகளாகப் பகுக்கப்பட்டு உள்ளது. திருஅருட்பா முதலில் இராமலிங்க அடிகளின் தலைமை சீடர் தொழுவூர் வேலாயுதனார் அவர்களால் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்டது. பின்னர் ஐந்து மற்றும் ஆறாம் திருமுறைகள் வெளியிடப்பட்டது. இவரது உரைநடை, கடிதங்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுத் தனி நூலாக முன்னாள் அறநிலையத் துறை ஆணையாளர் உயர்திரு. பாலகிருஷ்ணன் அவர் கள் வெளியிட்டார். பின்னர் ஊரன் அடிகளும் காலமுறை பதிப்பு வெளி யிட்டுள்ளார்.



***வள்ளலார் வாழ்ந்த அறை***

**வள்ளலார்**
**இராமலிங்கம் பிள்ளையின்**
**பிறந்தநாள் அக்டோபர் 04ஆம் நாள்**
**கொண்டாடப்படுகின்றது.**

¤

# அசோகமித்ரன்

**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

அசோகமித்ரன், தமிழின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் தியாகராஜன். 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழில் எழுதி வருகிறார்.

1931 ஆம் ஆண்டு ஆந்திர பிரதேசத்தில் உள்ள செகந்திராபாத் நகரத்தில் பிறந்தவர்.

முதலில் இவர் ஆங்கிலத்தில் தான் எழுத ஆரம்பித்தார். பின்பு படிப்படியாகத் தமிழில் எழுதத் துவங்கினார்.

இவரது முதல் படைப்பு 'அன்பின் பரிசு' என்கின்ற வானொலி நாடகம் ஆகும். பின்பு முதல் கதை 'ஒரு நாடகத்தின் முடிவு' ஜூலை 1957இல் கலை மகளில் வெளியானது.

எளிமையும், மெல்லிய நகைச் சுவையும் கொண்டது இவருடைய எழுத்து. தமிழ் இலக்கியத்துக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்த இவரது கதைகள் ஆங்கிலம் இந்தி போன்ற பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இலக்கியங்களைத் தமிழில் அறிமுகம் செய்த தனிப் பெருமை இவருக்குரியது. ஆங்கில நாளிதழ்களில் தொடர்ந்து எழுதி வரும் அசோகமித்ரன், அயோவா பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர் களுக்கான சிறப்புப் பயிலரங்கில் கலந்து கொண்டவர்.

'அப்பாவின் சிநேகிதர்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக 1996 ஆண்டின் சாகித்ய அகாதமி விருது பெற்றார்.

ஜெமினி ஸ்டுடியோவில் மக்கள் தொடர்புத் துறையில் சில காலம் பணியாற்றியுள்ளார். இவர் ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றிய அனுபத்தைக் 'கரைந்த நிழல்கள்' என்ற நாவலாக எழுதினார். பின்பு



இதனை ஆல்பர்ட் ப்ரான்க்ளின் என்பவர் Cast of character என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

1960களில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் நடந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் கிங்கரன் என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கணையாழி இதழின் ஆசிரியப் பொறுப்பு வகித்திருக்கிறார். அம்ஷன் குமார் என்பவர் இவரைப் பற்றி அரைமணி நேரம் அளவிற்கு ஆவணப் படத்தை எடுத்துள்ளார்.

***படைப்புகள்:***

இவர் இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பல கட்டுரை களையும் எழுதி உள்ளார்.

***நாவல்கள்***


1.பதினெட்டாவது அட்சக்கோடு
2.தண்ணீர்
3.இன்று
4.ஆகாசத்தாமரை
5.ஒற்றன்
6.மானசரோவர்
7.கரைந்த நிழல்கள்
8.விழா மாலைப்பொழுதில்

***குறுநாவல்கள்***

1.இருவர், 2.விடுதலை
3.தீபம்

¤

## GELILEO



Signature



| | |
|---|---|
| **Born** | **15 February 1564<br>Pisa, Duchy of Florence, Italy** |
| **Died** | **8 January 1642 (aged 77)<br>Arcetri, Grand Duchy of Tuscany, Italy** |
| **Residence** | **Grand Duchy of Tuscany, Italy** |
| **Nationality** | **Italian (Tuscan)** |
| **Fields** | **Astronomy, physics and mathematics** |
| **Institutions** | **University of Pisa<br>University of Padua** |
| **Alma mater** | **University of Pisa** |
| **Academic advisors** | **Ostilio Ricci** |
| **Notable students** | **Benedetto Castelli<br>Mario Guiducci<br>Vincenzo Viviani** |
| **Known for** | **Kinematics<br>Dynamics<br>Telescopic observational astronomy<br>Heliocentrism** |

**R. Divya,** I$^{st}$ B.Sc.Chemistry

# சர்வதேச விண்வெளி ஆய்வு மையம்

**ப. சௌந்தர்யா,**
முதலாண்டு வேதியியல்துறை

கடந்த 12 ஆண்டுகளாக நடந்து வந்த சர்வதேச விண்வெளி மையத்தின் கட்டுமான பணி இறுதி கட்டத்தை எட்டியது. விண்வெளி ஆய்வுக்காக பூமிக்கும் மேலே 355 கி.மீ. தொலைவில் சர்வதேச விண்வெளி மையம் கட்டும் முயற்சியில் 16 நாடுகள் ஈடுபட்டன.

அமெரிக்க மற்றும் ரஷ்ய விண் கலகங்களில் மாறி மாறி, பொருட்கள் மற்றும் விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட்டு சர்வதேச விண்வெளி மையம் அமைக்கும் பணி நடந்து வந்தது. இந்தப் பணிகள் கடந்த 12 ஆண்டுகளாகத் தீவிரமாக நடந்து வந்தது. இதுவரை 4 இலட்சத்து 55 ஆயிரம் கிலோ எடையுள்ள வன் பொருட்கள் சர்வதேச விண்வெளி மையத்தில் பொருத்தப்பட்டுள்ளன. இறுதிக் கட்டமாக 15 மீட்டர் நீளமுள்ள ரோபோ கிரேன் பொருத்தும் பணியை எண்டவர் விண்கலத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் பின்கி மற்றும் சேமிடோப் ஆகியோர் சிறப்புற முடித்தனர். இத்துடன் விண்வெளி மையத்தின் மொத்தக் கட்டுமான பணிகள் நிறைவடைந்து விட்டன.

சர்வதேச விண்வெளி மையத்தின் உள்கட்டமைப்பு தற்போது ஒரு போயிங் 747 ரக விமானம் அளவுக்குப் பெரிதாக உள்ளது. மின் உற்பத்திக்காக வெளிப்பகுதியில் பொருத்தப் பட்டுள்ள சோலர் தகடுகள் கால்பந்து மைதானம் அளவுக்குப் பெரிதாக உள்ளது. விண்வெளி மையத்தில் பணிகள் முடிந்து விட்டதால் எண்டவர் விண்கலம் பூமிக்குப் புறப்பட்டது. அமெரிக் காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள கொன்னடி விண்வெளி மையத்தில், எண்டவர் தரையிறங் கியவுடன் தன் கடைசிப் பயணத்தை முடித்துது. பின் அதனை மியூசியத்துக்கு அனுப்பி விட்டனர்.



அதன்பின் அட்லாண்டிஸ் விண் கலம் ஜூலை 8ஆம் நாள் தன் இறுதி விண்வெளி பயணத்தைத் தொடங்கி முடித்தது. நாசாவின் அனைத்து விண் கலங்களும் இந்தாண்டு மியூசியத் துக்குச் செல்கின்றன. புதிய மொடல் விண்கலங்களை உருவாக்கும் முயற்சியில் நாசா தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்தப் புதிய விண்கலம் விண்வெளி மையத்தின் சுற்றுவட்ட பாதையைத் தாண்டி வெகு தொலைவில் செல்லும் அளவுக்குத் திறன்பெற்றதாக இருக்கும். அதுவரை ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம், நாசா வீரர்கள் விண்வெளி மையத் துக்குச் சென்றுவருவர்.


¤

## About **Malgudi Day's**

**P. Vinotha,** I[st] B.A. English


**R. K. Narayan** (**Rasipuram Krishna swami Iyer Narayanaswami**) was an Indian author whose works of fiction include a series of books about people and their interactions in an imagined town in India called Malgudi.

He is one of three leading figures of early Indian literature in English, along with Mulk Raj Anand and Raja Rao. He is credited with bringing Indian literature in English to the rest of the world, and is regarded as one of India's greatest English language novelists.



Malgudi is a fictional, semi-urban town in southern India, conjured by Narayan. He created the town in September 1930, onVijayadashami, an auspicious day to start new efforts and thus chosen for him by his grandmother. As he mentioned in a later interview to his biographers Susan and N. Ram, in his mind, he

first saw a railway station, and slowly the name *Malgudi* came to him. The town was created with an impeccable




historical record, dating to the Ramayana days when it was noted that Lord Ramapassed through; it was also said that the Buddha visited the town during his travels. While Narayan never provided strict physical constraints for the town, he allowed it to form shape with events in the various stories, becoming a reference point for the future. Dr James M. Fennelly, a scholar of Narayan's works, created a map of Malgudi based on the fictional descriptors of the town from the many books and stories.

**Malgudi Days** is a collection of short stories by R. K. Narayan published in 1943 by Indian Thought Publications. The book was republished outside India in 1982. The book includes 19 stories, all set in the fictional town of Malgudi, located in South India.

Each of the stories portrays a facet of life in Malgudi. The New York Times described the virtue of the book as "everyone in the book seems to have a capacity for responding to the quality of his particular hour. It's an art we need to study and revive."

In 1986, a few of the stories in the book were included in the Malgudi Days television series and, directed by actor and director, Shankar Nag.

In 2004, the project was revived with film-maker Kavitha Lankesh replacing the late Shankar Nag as director. The new series was telecast from April 26, 2006 on Doordarshan.

¤

நிகழ்ச்சி

# உரைநடைப் பயிலரங்கு

தமிழ் இலக்கியம் பயிலும் மாணாக்கர்களுக்கு உரைநடை எழுது வதில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் நோக்கில் ***'உரைநடைப் பயிலரங்கு'*** 02.09.11 மற்றும் 03.09.11 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள் விருந்தி னர்களை அறிமுகப்படுத்தினார். கல்லூரிச் செயல் இயக்குநர் திருமதி. கவிதா சீனிவாசன் அவர்களும், கல்லூரி முதல்வர் முனைவர் நா. கண்ணன் அவர்களும் வாழ்த்துரை நல்கினர். நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் பெ. முருகன் அவர்கள் பயிலரங்கின் நோக்கத்தை எடுத்துக்கூறினார்.

பயிலரங்கில், ***எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழைகள்*** குறித்து பெங்களூர் புள்ளியியல் துறைப் பேராசிரியர் முனைவர் நஞ்சுண்டன் அவர்களும், ***சொற்சேர்ப்பும் பிரிப்பும்*** குறித்து நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மு. நடராஜன் அவர்களும் ***தொடர் பிழைகள்*** குறித்து திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் க. காசி மாரியப்பன் அவர்களும் ***ஒலிப்புப் பிழைகள்*** குறித்து நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. எழிலரசி அவர்களும் ***கருவி நூல்கள்*** குறித்து நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் பெ. முருகன் அவர்களும் உரையாற்றினர். மாணாக்கர்களுக் குப் பயிற்சியும் அளித்தனர்.

பயிலரங்கு நிறைவு விழாவில் தமிழ் விரிவுரையாளர் முனைவர் த. கண்ணன் அவர்கள் இப்பயிலரங்கின் இரண்டு நாள் செயல்பாடுகள் குறித்துப் பேசினார். கல்லூரி முதல்வர் முனைவர் நா. கண்ணன் அவர்கள் மாணாக்கர்களுக்குச் சான் றிதழ்களை நல்கிப் பாராட்டினார். மாணாக்கர்களுள் சிலர் பயிலரங்கு குறித்துப் பின்னூட்டம் வழங்கினர். பயிலரங்கத் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் பங்கேற்ற வர்களுக்குத் தமிழ் விரிவுரையாளர் முனைவர் ப. சரவணன் அவர்கள் நன்றி கூறினார்.